



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

மனிதன் பல கார்யங்களை தினசரி செய்து கொண்டு இருக்கிறான். ஒரு சில கார்யங்களை முன்பின் யோசனை செய்யாமல் ஆசையை வளர்த்துக்கொண்டு செய்ய புறப்படக்கூடாது. அப்படி ஆரம்பித்து நடுவில் நிறுத்திவிட்டால் பரிச்ரமம் மட்டுமே மிஞ்சும். அதனை ஒட்டி நஷ்டமும் கூட வரலாம். வீடு தீ பிடிந்த பிறகு கிணறு வெட்டப்போனால் மூர்க்கத்தனம் தான் ஆகும்.



चिन्तनीया हि विपदामादौवेव प्रतिक्रिया ।
न कूपखननं युक्तं प्रदीप्ते वह्निना गृहे ॥

சிந்தனீயா ஹி விபதா$^3$மாதௌ$^3$வேவ ப்ரதிக்ரியா |
ந கூபக$^2$னனம்’ யுக்தம்’ ப்ரதீ$^3$ப்தே வஹ்னினா க்$^3$ரு’ஹே ||

ஆகையால் எந்த கார்யத்தையும் ஆரம்பிக்கும் முன் நடுவில் சம்பவிக்ககூடிய கஷ்டங்களை எதிர்பார்ப்பது தான் புத்திசாலித்தனம். சில சமயத்தில் ஆரம்பித்த கார்யத்தில், எதிர்பார்க்காத கஷ்டங்கள் வந்தால், அதற்கு வேண்டிய யோசனை களெல்லாம் அனுபவசாலிகளிடமிருந்து அபிப்ராயம் வாங்கிக்கொண்டு கார்யத்தை முன்னேற வைக்க வேண்டும். இதுதான் சரியான முறை. கஷ்டங்கள் வந்துவிட்டது என்ற காரணத்தால் கடமையைச் செய்யாமல் நிறுத்திவிடுவது சரியல்ல. ஒரு விவேகி இதையே சவாலாகி எடுத்துக்கொண்டு உற்சாகம் குறையாமல் பகவான்மேல் பாரத்தைப் போட்டு, கஷ்டங்களை நீக்கிவிட்டு கார்யஸாதகன் ஆகிவிடுவான்.

இதை நன்றாக புரிந்து கொண்டு எந்த கார்யத்தையும் சுலபமாக முடித்து வர எல்லாரையும் ஆசிர்வதிக்கிறோம்.

நன்றி - அம்மன் தரிசனம்

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**


An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

**(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)**

### காணாபத்யம்

**19. த்வஜ கணபதி**



ய: புஸ்தகாக்ஷ குணதண்ட கமண்டலு ஸ்ரீர்
நிவ்ருத்யமாந கரபூஷண மிந்துவர்ணம்
ஸ்தம்பேரமாநந சதுஷ்டய ஸோபமாநம்
த்வாம் ஸம்ஸ்மரே த்வஜகணாதிபதே ஸ தந்ய:

புத்தகம், அக்கமாலை, தண்டம், கமண்டலம் ஆகியவை நான்கு திருக்கரங்களையும் ஆபரணங்களாக அலங்கரிக்க, சந்திரனின் வண்ணத்தில் (வெண்ணிறத்தில்) ஒளிரும் திருமேனியை உடைவரும், கம்பம் போல் திடமானதும், சோபிப்பதுமான நான்கு திருமுகங்கள் கொண்டவரும் ச்ரேஷ்டருமான, த்விஜ கணபதியைத் துதிப்பவர் புண்ணியம் செய்தவராவார்.

**20. விக்ந (புவநேச) கணபதி**




ஸங்கேக்ஷுசாப குஸுமேஷு குடாரபாஸ
சக்ராங்குஸை: கலம மஞ்ஜரிகா ககாத்யை:
பாணிஸ்திதை: பரிஸமாஹித பூஷண ஸ்ரீ
விக்நேஸ்வரோ விஜயதே தபநீய கௌர:

சங்கு, கரும்பு வில், மலரம்பு, கோடரி, பாசம், சக்ரம், அங்குசம், பூங்கொத்து ஆகியவை தாங்கிய எண்கரங்களை உடையவரும், விரும்பத் தக்க அலங்காரங்கள் சூழ சோபையுடன் விளங்குகிறவரும், பொன்னிறத் திருமேனியை உடையவரும் ஆன விக்ந விநாயகரைத் துதிக்கிறேன்.

**21. ஊர்த்வ கணபதி**


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)



கல்ஹார ஸாலி கமலேக்ஷுக சாபபாண
தந்தப்ரரோஹககதீ கநகோஜ்வலாங்க:
ஆலிங்கநோத்யதகரோ ஹரிதாங்கயஷ்ட்யா
தேவ்யாதிஸத்வ மபய மூர்த்வ கணாதிபோமே

செங்கழுநீர்ப் புஷ்பம், நெற்கதிர்க் கொத்து, தாமரை மலர், கரும்பு வில், அம்பு; தந்தத்தில் தாங்கிய கதை முதலியவற்றைக் கரங்களில் தரித்த, பொன் போல மின்னும் திருமேனியை உடையவரும், பச்சை நிற திருமேனியளான தேவியை ஆலிங்கனம் செய்தவாறு அருட்காட்சி தருபவருமான ஊர்த்வ கணபதியைத் துதிக்கிறேன்.




### 22. லக்ஷ்மீ கணபதி

பிப்ராணஸ் ஸுகபீஜபூர கமலம் மாணிக்ய கும்பாங் குஸாந்
பாஸங் கல்பலதாஞ்ச கட்க விலஸத் ஜ்யோதிஸ் ஸுதா நிர்ஜர:
ஸ்யாமேணாத்த ஸரோருஹேண ஸஹிதோ தேவீத்வயே நாந்திகே
கௌராங்கா வரதாந ஹஸ்த கமலோ லக்ஷ்மீ கணேஸோSவதாத்

தந்தாபயே சக்ரவரௌ ததாநம் கராக்ரகம் ஸ்வர்ணகடம் த்ரிநேத்ரம்
த்ருதாப்ஜ மாலிங்கிதமப்தி புத்ர்யா லக்ஷ்மீ கணேஸம் கநகாபமீடே

திருக்கரங்களில் இருக்கும், கிளி, செம்மாதுளம்பழம், தாமரை, மாணிக்கமயமான கும்பம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, வாள் ஆகியவை, ஜோதிப் பிரகாசம் போல் ஒளி வீச பிரகாசமான திருமுகத்துடன், நீல வண்ண ஆம்பல் மலரைத் தாங்கிய, வெண்ணிறத் திருமேனியை உடைய இரு தேவியரை இரு புறமும் அருகில் அமர்த்திக் கொண்டு, பொன்னிறத் திருமேனியை உடையவராக வரம் தரும் (வரத முத்திரை) கரத்துடன் விளங்கும் லக்ஷ்மீ கணபதியைத் துதிக்கிறேன்.


தந்தம், அபயம், வரதம், சக்ரம் ஆகியவை தாங்கிய கரங்களுடையவரும், துதிக்கையில் பொற்கலசம் ஏந்தியவரும், மூன்று கண்களை உடையவரும்,, செந்தாமரை ஏந்திய லக்ஷ்மீயுடன் கூடியவருமான, பொன்னிற மேனியை உடைய லக்ஷ்மீ கணபதியை வணங்குகிறேன் (தொடரும்...)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## தசமஹா வித்யா

**(புதுக்கோட்டை பூஜ்யஶ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)**

சிவனுக்கு நேர் எதிரில் காளியும், அவருக்கு மேல் தாராவும், வலது பக்கம் சின்னமஸ்தாவும், இடது பக்கம் புவனேஸ்வரியும், பின்பக்கம் எதிரிகளை அழிப்பதில் வல்லவளான பலளாமுகியும், கீழே பைரவியும், தென்கிழக்கே விதவையும், முதியவளுமான தோற்றத்தில் தூமாவதியும், தென்மேற்கே அழகிய திரிபுரசுந்தரியும், வடமேற்கில் மாதங்கியும், வடகிழக்கில் கமலாத்மிகையும் தோற்றம் கொண்டு நின்றனர்.

இந்த 10 தேவியரும் தந்த்ர சாஸ்த்திரத்தில் வழிபாட்டிற்குரிய உபாஸனா மூர்த்திகளாவர். தேவியின் 90 கோடி தோற்றங்களில் தச மஹா வித்யா தேவியர் தோற்றமே முதன்மையானதாகும்,

இந்த தச மஹா வித்யா தோற்றம் மிகவும் பழமையானதாகும். மஹா விஷ்ணு தசாவதாரம் எடுத்த போது தசாவதார காரியங்கள் நிறைவேற உதவியர்கள் தச மஹா வித்யைகளே.




காளி - கிருஷ்ண அவதாரம்
தாரா - ராம அவதாரம்
ஷோடசீ - கல்கி அவதாரம்
புவனேஸ்வரி - வராஹ அவதாரம்
திரிபுரபைரவி - நரஸிம்ம அவதாரம்
சின்னமஸ்தா - பரசுராம அவதாரம்
தூமாவதி - வாமன அவதாரம்
பகளாமுகி - கூர்ம அவதாரம்
மாதங்கி - பலராம அவதாரம்
கமலா – மச்ச அவதாரம்
என்று அந்தந்த அவதாரங்களுக்கு உரிய சக்தியை வழங்கியவர் தச மஹா தேவியர்களாவர் என்று முண்டமாலா தந்திரம் கூறுகிறது.

இவர்களில் காளி, புவனேஸ்வரி, ஷோடசீ, கமலா, மாதங்கி ஆகியோர் வழிபாடு மட்டுமே இன்றளவும் பெருமளவில் பின்பற்றப்படுகிறது. தாரா தேவி வழிபாடு புத்தமதத்தினரிடையே அதிகமாக உள்ளது. தூமாவதி, சின்னமஸ்தா, பகளாமுகி, பைரவி ஆகியோர் வழிபாட்டு முறைகள் மிகவும் கடினமானபடியால், இப்போது அதிகம் வழக்கத்தில் இல்லை.

உண்மையான பக்தியுடன் தச மஹா வித்யா தேவியரை வழிபடும் சாதகர்கள், உயர்ந்த ஞானத்தையும், தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அடைவர். (தொடரும்…)

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**
An Unit of the e magazine Voice of Jagadguru)

## நவராத்திரி

**(புதுக்கோட்டை பூஜ்யஶ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)**



வருடத்தின் ஒவ்வொரு மாதத்திலும் நவராத்திரிகள் உண்டு என்கின்றன சாக்த தந்த்ரங்கள். அந்த பன்னிரண்டிலும் மிக முக்கியமானவை நான்கு நவராத்திரிகள். ஆடி மாதத்தில் ஆஷாட நவராத்திரி, புரட்டாசியில் சாரதா நவராத்திரி, மாசி மாதம் சியாமளா நவராத்திரி, பங்குனியில் வசந்த நவராத்திரி. அவற்றுள் ச்யாமளா நவராத்ரி மற்றும் ஆஷாட நவராத்ரி குறித்து நாம் பார்த்தோம்.

ஆஷாட நவராத்திரியில் வாராஹிதேவியை பூஜிப்பார்கள். சாரதா நவராத்திரியில் துர்கை. சியாமளா நவராத்திரியில் சியாமளை என்கிற ராஜமாதங்கியை பிரதான மாக வைத்துக் கொண்டாடு வார்கள். வசந்த நவராத்திரியின் நாயகி ஶ்ரீலலிதாம்பிகை.

இது மிகவும் சிறப்புப் பெற்ற காலமாகும். ஶ்ரீ கிருஷ்ண பரமாத்மா ருதுக்களில் நான் வசந்த ருதுவாக இருக்கிறேன் எனக் கூறுகிறார். இந்த வசந்த ருதுவான இளவேனிற் காலம் பங்குனி அமாவாசைக்கு மறுநாள் முதல் தொடங்குகிறது.

வசந்த நவராத்ரியின் சிறப்பை விளக்கும் கதையைப் பார்போம்:

கோசல நாட்டை ஆண்டு வந்த த்ருவசிந்து என்னும் மன்னன் வேட்டைக்குச் சென்ற போது சிங்கத்தினால் கொல்லப்படுகிறான். அவனுக்குப் பிறகு அவனுடைய இரு மனைவிகளுள் ஒருத்தியான மனோரமவிர்க்குப் பிறந்த சுதர்சனனை அரசனாக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. அப்பொழுது துருவசிந்துவின் மற்றொரு மனைவி லீலாவதி மூலம் பிறந்த மகனுக்கே பட்டம் சூட்டப் பட வேண்டும் என்று லீலாவதியின் தகப்பனாரான உஜ்ஜைனி அரசர் யுதாஜித் கலகம் செய்கிறார். அவரோடு போரிட்ட மனோரமாவின்தந்தை கலிங்க தேச அரசர் வீரசேனர் யுத்தத்தில் மாண்டு போகிறார்

இதை கேள்விப்பட்ட மனோரமா தன் மகன் சுதர்சனனையும் உதவிக்கு ஒரு அடிமையையும் அழைத்துக்கொண்டு கானகம் சென்று பரத்வாஜ முனிவரிடம் தஞ்சம் அடைகிறாள். (தொடரும்…)

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**
An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு

**(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)**



**14. ஜ்வாலா மாலினி**

இந்த நித்யா தேவி நெருப்பு ஜ்வாலை ரூபமாய் இருப்பவள். பண்டாசுரனுடன் லலிதாதேவி நடத்திய யுத்தத்தில் நூறு யோஜனை நீளமும் முப்பது யோஜனை அகலமும் முப்பது யோஜனை உயரமும் கொண்ட நெருப்புக் கோட்டையைப் படைத்தவள். அக்னியையே மாலையாகக் கொண்டவள். இந்த அம்பிகையின் வித்யை அறுபது அட்சரங்களைக் கொண்டது. வைடூர்ய மகுடம் அணிந்து அக்னி ஜ்வாலையைப் போல் சிவந்து காட்சியளிக்கும் இத்தேவிக்கு ஆறுமுகமும் பன்னிரு கரங்களும் உள்ளன. கரங்களில் அங்குசம், கத்தி, வில், நெருப்பு, கதை, பாசம், கேடயம், தாமரை, சூலம், அம்பு, அபயம், வரதம் தாங்கியுள்ளாள். பல்வேறு அணிகலன்களைச் சூடிய இவளது ஒவ்வொரு திருமுகத்திலும் புன்முறுவலும் முக்கண்களும் உள்ளன. இவளை தேவரும் முனிவரும் சதா சூழ்ந்துள்ளனர்.

**மந்திரம்:**
ஓம் ஜ்வாலாமாலின்யை வித்மஹே மஹாஜ்வாலாயை தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

**வழிபட வேண்டிய திதிகள்:**
சுக்ல பட்ச சதுர்த்தசி, கிருஷ்ண பட்ச த்விதியை


**வழிபடு பலன்கள்:**
எந்தத் துன்பமும் தீயிலிட்ட பஞ்சுபோல் ஆகும். பகைவர்கள் அழிவர்.

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**

An Unit of the e magazine Voice of Jagadguru)

**15. சித்ரா**

திதி நித்யா தேவிகளில் பதினைந்தாம் நித்யா தேவியான சித்ரா, பளபளவென மின்னும் கிரணங்களை வீசிடும் திருமேனியவள். பல்வேறு ரத்னங்கள் பதித்த மகுடத்தில் பிறைமதி சூடியவள். வெண்பட்டாடை உடுத்தி, பல்வகையான ஆபரணங்களை மேனி முழுதும் அணிந்து அழகே வடிவாய்த் திகழ்கின்றாள். பாசம், அங்குசம், அபயம், வரதம் தரித்த நான்கு திருக்கரங்கள் கொண்ட இவள், பக்தர்களின் பயத்தை நாசம் செய்பவள். சர்வானந்தமயி என்றும் நிலையானவள். கனவிலும், நினைவிலும் அடியவர்கள் இதயத்தில் வீற்றிருப்பவள். உதிக்கின்ற சூரியனைப்போல் ஞான ஒளி வீசி அறியாமை இருளை விரட்டுபவள். அண்டங்கள் அனைத்திலும் மகிமை வெளிப்படத் திகழ்பவள். தனிப்பெரும் பரம்பொருள்.




**மந்திரம்:**
ஓம் விசித்ராயை வித்மஹே மஹா நித்யாயை தீமஹி
தன்னோ தேவிப்ரசோதயாத்.


**வழிபட வேண்டிய திதிகள்:**
பௌர்ணமி, கிருஷ்ண பட்ச பிரதமை.

**வழிபடு பலன்கள்:**
திடீர் அதிர்ஷ்டமும், பெரும் செல்வமும் சேரும்.

(தொடரும்...)



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita


**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

### 2. ஸந்யாஸம்



ஸ்ரீமகாஸ்வாமிகளும் அவர்கள் குருஸ்வாமிகளும்.

எல்லாக் காரியங்களும் முடிய அஸ்தமனம் வரை ஆகிவிட்டது. உடனே ஸ்நாநம் செய்வித்து ஸ்ரீமத் ஆசார்யார் சின்ன ஸ்வாமிகளுக்கு ஸாயங்கால ஆஹ்நிகங்களையும் செய்வித்து லகுவாக பொரியை ஆஹாரமாக கொடுப்பித்துவிட்டு, தான் ஆஹ்நிகம் செய்வதற்கு உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திலேயே ஒரு கிருஷ்ணாஜினத்தின் (மான் தோல்) மேல் சின்ன ஸ்வாமிகளைப் படுத்துக்கொள்ளச் சொன்னார்கள். உடனே நன்றாக நித்திரை வந்துவிட்டது. கொஞ்ச நேரம் சென்றவுடன் சின்ன ஸ்வாமிகள் ஸ்வப்னத்தில்

सर्वोऽहं सर्वोऽहं सर्वोऽहं

என்று மூன்று தடவை சொன்னார்கள். இதைக் கேட்ட பெரிய ஸ்வாமிகளுக்கு ஏற்பட்ட ஸந்தோஷத்திற்கும் ஆச்சரியத்திற்கும் எல்லையே இல்லை.

பிறகு ஸம்ஸ்தான வழக்கப்படி லௌகிகமாய் பட்டாபிஷேக மஹோத்ஸவம் நடத்தப்பட்டது. இவ்வைபவங்களை யெல்லாம் மஹாராஜாவே கூடவிருந்து நடத்திவைத்துவிட்டு பின்னால் தனித்து சின்ன ஸ்வாமிகளை தரிசிக்க வந்த ஸமயம் "தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டதும், "ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தின் வாசலில் இரு பக்கங்களிலுமிருந்து சாமரம் போடுவதற்காக இரண்டு யானைக்குட்டிகள் வேண்டும்" என்றார். உடனே மஹாராஜா மிகவும் ஸந்தோஷப்பட்டு தன் கஜசாலைக்கு சொல்லியனுப்பி, அங்கு ஸித்தமாயிருந்த ஒரு பெண் யானைக்குட்டியை வரவழைத்து சின்ன ஸ்வாமிகளுக்கு அனுப்பிக் கொடுத்தார். பிறகு சில நாள் மைஸூரிலிருந்துவிட்டு ஸ்ரீமத் ஆசார்யார் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை யுத்தேசித்து "பச்சிமவாஹிநீ" என்ற ஸ்தலத்திற்கு சிஷ்யருடன் விஜயம் செய்து சாதுர்மாஸ்ய தீக்ஷையை ஆரம்பித்தார்கள். சாதுர்மாஸ்யம் முடிந்தவுடன் தக்ஷிணதேச யாத்திரையாகவே புறப்பட்டுவிட்டார்கள்.

### 3.முதல் யாத்திரை

சின்ன ஸ்வாமிகளுக்கு முதலில் கணகாலூர் சாமா சாஸ்திரிகளும், பிறகு லக்ஷ்மீ நரஸிம்ஹ சாஸ்திரிகளுமே காவ்ய பாடம் சொல்லிவந்தார்கள். 12-வது வயதில் தர்க்கபாடம் ஆரம்பிக்கப்பட்டது. ஸஹபாடிகளாக திராவிட தேசத்திலிருந்து சில சிறுவர்களையும் சேர்க்கப்பட்டது. ஸ்ரீமத்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)


ஆசார்யாரவர்களும் ஸௌகர்யம் போல் தர்மஸூக்ஷ்மங்களைப் போதித்து வந்தார்கள். சின்ன ஸ்வாமிகளிடம் பெரியவருக்கு இருந்த வாத்ஸல்யம் எல்லையற்று இருந்தது.

யாத்திராக் கிரமமாக நன்சன்கூடுக்கு விஜயம் செய்த ஸமயம் சின்ன ஸ்வாமிகளுக்கு சரீரத்தில் கொஞ்சம் அஸௌகர்ய மேற்பட்டவுடன் ஸ்ரீ கண்டேசுவரர் தேவாலயத்திற்குப் போய் தன் கையால் விசேஷமாக பூஜைசெய்து பிரார்த்தனை செய்து கொண்டதுடன், சின்ன ஸ்வாமிகளைப் போல் ஒரு ஸ்வர்ண பிரதிமை செய்வித்து ஸ்ரீ கண்டேசுவரர் ஆலயத்தில் ஸோமாஸ்கந்த மூர்த்தியின் பீடத்தில் ஸ்திரமாய் இருக்கும்படி இசைத்து வைத்து விட்டார்கள். அன்றைய தினமே சின்னவருக்கு ஆரோக்கியம் ஏற்பட்டு குருநாதருடன் தேவாலயம் சென்று தர்சனம் செய்து ஆனந்திக்கும்படி ஏற்பட்டது.

பிறகு நஞ்சன்கூடிலிருந்து சாமராஜ நகரம் வந்து கணவாய் இறங்கி ஸ்ரீமத் ஆசார்யார் பால ஸ்வாமிகளுடன் கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, செங்கல்பட்டு. காஞ்சிபுரம், திருப்பதி, மதராஸ், கடப்பை, கர்நூல் முதலிய பிரதேசங்களில் வெகுகாலம் ஸாவகாசமாய் ஸஞ்சாரம் செய்தார்கள். அவர்கள் விஜயம் செய்த இடங்களிளெல்லாம் அதி உத்ஸாஹத்துடன் பக்தர்கள் ஸத்காரம் செய்து அவர்களுடைய விசேஷ அனுக்ரஹத்திற்கு பாத்திரரானார்கள். அவர்கள் யாத்திரா காலத்தில் கூடவந்த பரிவாரங்களைப் பார்த்தால் ஒரு பட்டினமே கூட வருவது போல் தோன்றும். உதாஹரணமாக, அவர்கள் தஞ்சாவூர் பக்கம் 1838-ல் விஜயம் செய்யும்போது இருந்த பரிவாரங்களைக் கண்டு அப்பொழுதுள்ள கலெக்டர் பிறப்பித்திருக்கிற உத்திரவு இக்காலத்தில் விசித்திரமாய் தோன்றும்.


"சிருங்கேரி ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமி அவர்கள் தேச ஸஞ்சாரமாய் வருகிறபடியாலே அவருடனே கூடவருகிற இதனடியில் கண்ட ஆயுதம் முதலானதுகளை வழியில் ஒருவரும் தடங்கல் செய்யாமல் தாராளமாய் விட்டுவிட வேண்டியது. இவர்கள் இறங்கப்பட்ட இடங்களில் யாதொரு திருட்டு பிரட்டு நடவாமலும் கூலி ஆள் முதலானதும் கிரயத்திற்கு சாமான் வகையறாக்களும் தருவித்து கொடுக்க வேண்டும்."

யானை 5 கத்தி 50
ஒட்டகம் 5 பல்லியம் 20
குதிரை 60 கட்டரி 20
மாடு 100 துருப்பு சிப்பாய்கள் 32
வண்டி 20 சிப்பாய்கள் 21
பல்லக்கு 7 சேவகர்கள் 21
பணுக்கு 50
(தொடரும்...)



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

## ஶ்ரீமந்நாராயணீயம்

## २. श्रीभगवद्रूपवर्णनम्

### 2. ஶ்ரீப⁴க³வத்³ரூபவர்ணனம்

एवंभूतमनोज्ञतानवसुधानिष्यन्दसन्दोहनं
त्वद्रूपं परचिद्रसायनमयं चेतोहरं शृण्वताम् ।
सद्यः प्रेरयते मतिं मदयते रोमाञ्चयत्यङ्गकं
व्यासिञ्चत्यपि शीतबाष्पविसरैरानन्दमूर्च्छोद्भवैः ॥ ६ ॥

क्षेत्रज्ञाय नमः

ஏவம்பூ⁴தமனோஜ்ஞதானவஸுதா⁴நிஷ்யந்த³ஸந்தோ³ஹனம்’
த்வத்³ரூபம்’ பரசித்³ரஸாயனமயம்’ சேதோஹரம்’ ஶ்ரு’ண்வதாம் |
ஸத்³ய: ப்ரேரயதே மதிம்’ மத³யதே ரோமாஞ்சயத்யங்க³கம்’
வ்யாஸிஞ்சத்யபி ஶீதபா³ஷ்பவிஸரைரானந்த³மூர்ச்சா²த்³ப⁴வை: ||6||

க்ஷேத்ரஜ்ஞாய நம:

ஹே குருவாயூரப்பா! முன்பே கூறப்பட்டவாறு தங்கள் திருவுருவம் அழகாகிற அமுதத்தைப் பெருக்குவதாகவும்; பரமானந்த ரஸத்தின் களஞ்சியமாகவும் (பரப்பிரம்ம ஸ்வரூபமாகவும்): கேட்போரின் மனதைக் கவருவதாகவும் உள்ளது. அதாவது ஏதேச்சையாக பக்தன் ஒருவன் பகவானுடைய திருவிளையாடல்களைக் கேட்க நேரிடின் உடனே அது அவனது காது வழியாக இதயத்தில் புகுந்து அனைத்துப் பாவங்களையும் போக்குகிறது. அப்படி ஒரு முறை கேட்பவனை மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகிறது. ஆனந்த பரவசமாக்குகிறது. உடலை மயிர்க்கூச்செரியச் செய்கிறது. ஆனந்தத்தால் உண்டாகும் குளிர்ந்த ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி இவ்வுடலையே நனைத்து விடுகிறது.

**க்ஷேத்ரஜ்ஞாய நம: = க்ஷேத்திரத்தை அறிந்தவர்**

एवंभूततया हि भक्त्यभिहितो योगः स योगद्वयात्
कर्मज्ञानमयाद्भृशोत्तमतरो योगीश्वरैर्गीयते ।
सौन्दर्यैकरसात्मके त्वयि खलु प्रेमप्रकर्षात्मिका
भक्तिर्निःश्रममेव विश्वपुरुषैर्लभ्या रमावल्लभ ॥ ७ ॥

अक्षराय नमः

ஏவம்பூ⁴ததயா ஹி ப⁴க்த்யபி⁴ஹிதோ யோக³: ஸ யோக³த்³வயாத்
கர்மஜ்ஞானமயாத்³ப்⁴ரு’ஶோத்தமதரோ யோகீ³ஶ்வரைர்கீ³யதே |
ஸௌந்த³ர்யைகரஸாத்மகே த்வயி க²லு ப்ரேமப்ரகர்ஷாத்மிகா
ப⁴க்திர்நி:ஶ்ரமமேவ விஶ்வபுருஷைர்லப்⁴யா ரமாவல்லப⁴ ||7||

அக்ஷராய நம:

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஹே லக்ஷ்மீகாந்தார் குருவாபூரப்பா! இவ்வாறு பக்தியோகம் மிக்க பெருமை வாய்ந்ததாக இருப்பதாலல்லவா வியாஸர் முதலிய யோகீசுவரர்கள் அதை கர்மயோக, ஞானயோகங்களைக் காட்டிலும் மிகச் சிறந்ததென்று புகழ்கிறார்கள். இத்தகைய அன்பின் எல்லை நிலமான பக்தியோகம் அழகே வடிவெடுத்த தங்களிடத்தில் எவ்வித முயற்சியுமின்றியே அனைவராலும் எளிதில் பெறக்கூடியதாக அல்லவா இருக்கிறது.

**அக்ஷராய நமः = தேய்வுருதவர்**



निष्कामं नियतस्वधर्मचरणं यत्कर्मयोगाभिधं
तद्दूरेत्यफलं यदौपनिषदज्ञानोपलभ्यं पुनः ।
तत्त्वव्यक्ततया सुदुर्गमतरं चित्तस्य तस्माद्विभो
त्वत्प्रेमात्मकभक्तिरेव सततं स्वादीयसी श्रेयसी ॥ ८ ॥

योगाय नमः

நிஷ்காமம்' நியதஸ்வத⁴ர்மசரணம்'
யத்கர்மயோகா³பி⁴த⁴ம்'
தத்³தூ³ரேத்யப²லம்'
யதௌ³பநிஷத³ஜ்ஞானோபலப்⁴யம்' புன: |
தத்த்வவ்யக்ததயா ஸுது³ர்க³மதரம்' சித்தஸ்ய
தஸ்மாத்³விபோ⁴
த்வத்ப்ரேமாத்மகப⁴க்திரேவ ஸததம்' ஸ்வாதீ³யஸீ
ஶ்ரேயஸீ ||8||

யோகா³ய நம:

ஹே பிரபுவான குருவாயூரப்பா! கர்மங்கள் நித்யம் (தினந்தோறும் செய்யப்பட வேண்டிய ஸந்த்யாவந்தனம், தேவ பூஜை முதலியன), நைமித்திகம் (எப்பொழுதோ செய்யப்பட வேண்டிய வேள்வி முதலியன) என்று பலவகையாகவுள்ளன. அவற்றைப் பயனில் கருத்தின்றிச் செய்வதால் மனம் தூய்மை பெற்று வைராக்கியமுண்டாகிப் பின் ஞானமுண்டாகும். ஆகவே இவை உடனே பலனளிக்க வல்லனவல்ல. நாளடைவிலேயே பயனளிப்பவை, உபநிஷத்துக்களின் வாயிலாகக் கேட்டறிந்த ஞானமும் மோக்ஷத்தையளிக்கவல்லதே. ஆனால் அது மனம், புலன்களுக்குப் புலப்படாததாகையால் அதன் மூலம் பெறப்படும் ஞானம் எளிதில் அடைய முடியாததாக இருக்கிறது. ஆகையால் தங்களிடம் வைக்கப்படும் பிரேமையே வடிவான பக்தியொன்றே எப்பொழுதும் இன்பத்தையளிப்பதாகவும், பிரம்மா முதலியவர்களாலும் புகழத்தக்கதாகவும் இருக்கிறது.

**யோகா³ய நம: = யோகமாயும் யோகத்தால் பெறப்படுபவராயும் உள்ளவர் .**

अत्यायासकराणि कर्मपटलान्याचर्य निर्यन्मलाः
बोधे भक्तिपथेऽथवाप्युचिततामायान्ति किं तावता ।
क्लिष्ट्वा तर्कपथे परं तव वपुर्ब्रह्माख्यमन्ये पुन-
श्चित्तार्द्रत्वमृते विचिन्त्य बहुभिः सिद्ध्यन्ति जन्मान्तरैः ॥ ९ ॥

योगविदां नेत्रे नमः

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

அத்யாயாஸகராணி கர்மபடலான்யாசர்ய நிர்யன்மலா:
போ³தே⁴ ப⁴க்திபதே²(அ)த²வாப்யுசிததாமாயாந்தி கிம்’ தாவதா |
க்லிஷ்ட்வா தர்கபதே² பரம்’ தவ வபுர்ப்³ரஹ்மாக்²யமன்யே புன-
ஶ்சித்தார்த்³ரத்வம்ரு’தே விசிந்த்ய ப³ஹுபி⁴: ஸித்³த்⁴யந்தி ஜன்மாந்தரை: ||9||
யோக³விதா³ம்’ நேத்ரே நம:

ஹே குருவாயூரப்பா! மிக்க முயற்சியும், ஈடுபாடும் கொண்டு ஆற்றக் கூடிய கர்மாக்களை அனுஷ்டித்து, அதன் மூலம் மனதில் உள்ள மாசு நீங்கியவர்களாக ஞானயோகத்திற்கோ, பக்தியோகத்திற்கோ தகுதியைப் பெறுபவர் சிலர். அதனால் ஆவது என்ன? (பயன் ஒன்றுமில்லையே), மற்றும் சிலரோவெனில் காதலாகிக் கசிந்து உள்ளம் நெகிழாது, தர்க்க மார்க்கத்தில் (வேதாந்த வழியில்) பெரிதும் வருந்தி 'பிரம்மம்' என்ற சிறப்புப் பெயர் கொண்ட தங்கள் திருமேனியைத் தியானித்து அதாவது அறிவிற்கெட்டாத பிரம்மரூபமாகத் தியானித்து), பல பிறவிகளெடுத்து அதன் பிறகு பேரானந்தத்தை (மோக்ஷத்தை) அடைகின்றனர்.

**யோக³விதா³ம்’ நேத்ரே நம: = யோகம் அறிந்தவர்களை அழைத்துச் செல்பவர் .**

त्वद्भक्तिस्तु कथारसामृतझरीनिर्मज्जनेन स्वयं
सिद्ध्यन्ती विमलप्रबोधपदवीमक्लेशतस्तन्वती ।
सद्यः सिद्धिकरी जयत्ययि विभो सैवास्तु मे त्वत्पद-
प्रेमप्रौढिरसार्द्रता द्रुततरं वातालयाधीश्वर ॥ १० ॥
प्रधानपुरुषेश्वराय नमः (२०)

த்வத்³ப⁴க்திஸ்து கதா²ரஸாம்ரு’தஜ²ரீநிர்மஜ்ஜனேன ஸ்வயம்’
ஸித்³த்⁴யந்தீ விமலப்ரபோ³த⁴பத³வீமக்லேஶதஸ்தன்வதீ .
ஸத்³ய: ஸித்³தி⁴கரீ ஜயத்யயி விபோ⁴ ஸைவாஸ்து மே த்வத்பத³-
ப்ரேமப்ரௌடி⁴ரஸார்த்³ரதா த்³ருததரம்’ வாதாலயாதீ⁴ஶ்வர .. 10 ..
ப்ரதா⁴னபுருஷேஶ்வராய நம: (20)

ஹே விபுவான குருவாயூரப்பா! தங்களுடைய கதையாகிற அமுத வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பதனால் தங்களிடம் பக்தி தானாகவே உண்டாகிறது. அதன் மூலம் தூய்மையான பிரம்மஞானத்தின் ஸித்தி உடனே எளிதிலேயே கிடைக்கின்றது. பிறவிப் பயனை அளித்து வெற்றியுடன் விளங்குகின்றது. உங்களுடைய திருவடிகளில் முதிர்ந்த அன்புச் சுவையினால் கனிந்து விளங்கும் அத்தகைய பக்தியே எனக்கு விரைவில் உண்டாக வேண்டும். ஹே பிரபு ! என் வியாதி கூட்டங்களை அழித்து அருள்புரியுங்கள்.

**ப்ரதா⁴னபுருஷேஶ்வராய நம: = பிரகிருதிக்கும் ஜீவனுக்கும் ஈஸ்வரன் .**

Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்